# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| | | |
|---|---|---|
| தரம் - 09 | புவியியல் – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி - I

1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
   - ➢ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01) புவியின் மொத்தநிலப்பரப்பில் ஆசியாக் கண்டம் ஏறக்குறைய எத்தனை சதவீதத்தைக் கொண்டுள்ளது.
1. 20% 2. 25% 3. 30% 4. 40%

02) ஆசியாக் கண்டத்தின் தனி அமைவிடம்.
1. தென் அகலக்கோடு 25° – வட அகலக்கோடு 50°வரையிலும், கிழக்கு நெடுங்கோடு 25°- 150° வரையிலும்.
2. தென் அகலக்கோடு 10° – வட அகலக்கோடு 70°வரையிலும், கிழக்கு நெடுங்கோடு 15°– 180° வரையிலும்.
3. தென் அகலக்கோடு 25°– வட அகலக்கோடு 80° வரையிலும், கிழக்கு நெடுங்கோடு 25°– 180° வரையிலும்.
4. தென் அகலக்கோடு 10°– வட அகலக்கோடு 80°வரையிலும், கிழக்கு நெடுங்கோடு 25°–180° வரையிலும்.

03) கடல் மட்டத்தினைவிட மிகத்தாழ்வாக அமைந்துள்ள கடல்.
1. கஸ்பியன் கடல் 2. சாக்கடல் 3. ஏரல் கடல் 4. செங்கடல்

04) ''உலகின் முகடு'' என அழைக்கப்படுவது.
1. திபெத் மேட்டுநிலம் 2. மத்திய சைபீரிய மேட்டுநிலம்
3. தக்கண மேட்டுநிலம் 4. ஈரானியன் மேட்டுநிலம்

05) ஒக், மல்பெரி, பைன், யுகெலிப்டஸ் ஆகிய இயற்கைத் தாவரங்கள் பின்வரும் எத் தாவர வலயங்களுக்குள் உள்ளடங்கும்.
1. அயனமழைக் காடுகள் 2. ஊசியிலைக் காடுகள்
3. முட்புதர் பற்றைக் காடுகள் 4. இடைவெப்ப இலையுதிர்க் காடுகள்

06) கொகசோயிட் இனமக்கள் வாழும் நாடுகள்.
1. சீனா, யப்பான் 2. இந்தியா, இலங்கை
3. மலேசியா, கொரியா 4. ஆப்கானிஸ்தான், சிங்கப்பூர்

07) உலகில் அணுமின்சக்தியை அதிகளவில் பயன்படுத்தும் நாடுகளுள் முன்னணியில் திகழ்வது.
1. சீனா 2. இந்தியா 3. யப்பான் 4. பாகிஸ்தான்

08) விக்டோரியா, ரந்தெனிகல ஆகிய நீர்த்தேக்கங்கள் அமைந்திருப்பது.
1. களிகங்கையில் 2. கல் ஓயாவில்
3. மகாவலிகங்கையில் 4. கலாஓயாவில்


kalvi.lk

09) • இலங்கையின் தென்மேற்கு சமவெளிப் பகுதியில் காணப்படுதல்
• வருடாந்த சராசரி வெப்பநிலை 27°c
• வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 2000mm க்கும் அதிகம்
மேற்கூறப்பட்ட புவியியல் பண்புகளைக் கொண்ட காலநிலை வலயம்.
1. தாழ்நில ஈர வலயம் 2. தாழ்நில உலர் வலயம்
3. மலைநாட்டு ஈரவலயம் 4. மலைநாட்டு உலர் வலயம்

10) இலங்கையின் வடகீழ் பருவக் காற்றுவீசும் காலம்?
1. மே - செப்ரெம்பர் 2. மார்ச் - ஏப்ரல்
3. ஒக்ரோபர் - நவம்பர் 4. டிசம்பர் - பெப்ரவரி

• **11 தொடக்கம் 12 வரையான வினாக்களுக்கு ''அ'' மற்றும் ''ஆ'' என இரண்டு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும் போதுகிடைக்கும் சரியானவிடையின் கீழ்க் கோடிடுக.**

11)

| **"அ"<br>இலங்கையின் கரையோர நிலத்தோற்றங்கள்** | **"ஆ"<br>காணப்படும் இடங்கள்** |
|---|---|
| 1. கடனீரேரி | A பருத்தித்துறை |
| 2. முனை | B ரூமஸ்வல |
| 3. கழிமுகம் | C புத்தளம் |
| | D மீ ஓயா |

1. CBA 2. CAD 3. BCD 4. ACD

12)

| **"அ"<br>நதிக்கரைகள்** | **"ஆ"<br>நாகரிகங்கள்** |
|---|---|
| 1. யூப்பிரட்டீஸ் தைகிறீஸ் | A எகிப்திய நாகரிகம் |
| 2. குவாங்கோ | B சிந்துவெளி நாகரிகம் |
| 3. இந்துநதி | C மொசப்பத்தேமிய நாகரிகம் |
| | D சீன நாகரிகம் |

1. CDB 2. CBD 3. CAB 4. CAD

13) உலகில் அதிக சனத்தொகை கொண்ட முதல் இரண்டு நாடுகள்,
1. சீனா, யப்பான் 2. இந்தியா, யப்பான்
3. சீனா, இந்தியா 4. சீனா, இந்தோனேசியா

14) கடல் குகையொன்றினூடாக நீரானது மேல் நோக்கி சிதறுவதன் காரணமாக ஒலியினை ஏற்படுத்தும் நிலவுருவம்.
1. ஓங்கல் 2. டெல்ரா 3. கடனீரேரி 4. ஊதுதுளை

15) சீதாவாக்கை, பொலனறுவை, மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களில் காணப்படுவது.
1. சுதந்திர வர்த்தகவலயங்கள் 2. கைத்தொழில் நகரங்கள்
3. சேவை நகரங்கள் 4. ஆடைத் தொழிற்சாலைகள்

16) இலங்கையின் மொத்த சனத்தொகையின் ஆயுள் எதிர்பார்ப்பின் சதவீதம்
1. 72% 2. 74.2% 3. 76.5% 4. 78.6%


kalvi.lk

17) தென்னாசிய நாடுகளுக்கிடையில் உயர்ந்த எழுத்தறிவு வீதத்தினைக் கொண்ட நாடு,
1. இந்தியா 2. பங்களாதேஷ் 3. பாகிஸ்தான் 4. இலங்கை

18) இலங்கையின் தரைத்தோற்ற அம்சங்களைக் காட்டுவதற்காக 1:50000 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்ட படத்தாள்களின் எண்ணிக்கை.
1. 72 2. 88 3. 92 4. 96

19) இலங்கையின் 1:50000 அளவுத்திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இடவிளக்கப்படங்களில் அதிவேக நெடுஞ்சாலையைக் குறித்து நிற்கும் நிறம்,
1. ஊதா 2. சிவப்பு 3. கறுப்பு 4. மஞ்சள்

20) இலங்கையின் ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சமவாயம்
1. ராம்சார் 2. மொன்றியல் 3. மஞ்செஸ்டர் 4. புறூண்லன்ட்

(20x2= 40 புள்ளிகள்)

## பகுதி - II


- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **அத்தோடு நான்கு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

**01)**

அ. இலங்கையின் 1:50000 இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படும் பின்வரும் அம்சங்களுக்குரிய வழக்கக் குறியீடுகளைப் பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வரைக.

1. மாவட்ட எல்லை
2. சிறுவீதி
3. புகையிரத நிலையம்
4. தேயிலை
5. சுற்றுலாவிடுதி
6. திரிகோணகணித நிலையம் (6 புள்ளிகள்)

ஆ. கீழேதரப்பட்டுள்ள ஆசியப் புறவுருவப் படத்தில் இலக்கங்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள அம்சங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அந்த அம்சங்கள் குறித்துக் காட்டும் சரியான இலக்கத்தினை அதற்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.




1. தாய்லாந்து (.........)
2. குவாங்கோ நதி (.........)
3. டோக்கியோ (.........)
4. செங்கடல் (.........)
5. பாகிஸ்தான் (.........)
6. பசுபிக் சமுத்திரம் (.........)

(6 புள்ளிகள்)

**02)**

I. இமயமலைத் தொடரில் அமைந்துள்ள மலைச் சிகரங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

II. ஆசியா கண்டத்தின் சார்பமைவினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. ஆசியப் பிரதேசத்தின் சிறப்பம்சங்கள் **மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை** விளக்குக (5 புள்ளிகள்)

**03)**

I. காலநிலை என்றால் என்ன? (3 புள்ளிகள்)

II. ஆசியாவின் மிகக் குறைந்த, அதிக வெப்பநிலை நிலவும் நகரங்களையும் அவை அமைவு பெற்றுள்ள நாடுகளையும் முறையே குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. புவியின் பிரதான **மூன்று** காலநிலை வலயங்களைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றின்** பண்புகளை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)


**04)**

I. இல 1, 2, 3 என குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் பிரதான தரைத்தோற்ற வலயங்களை முறையே குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. இலக்கம் 2 குறித்து நிற்கும் தரைத்தோற்ற வலயத்தின் சிறப்பம்சங்கள் **நான்கு** தருக (4 புள்ளிகள்)

III. a) மேட்டுநிலம் என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? (2 புள்ளிகள்)

b) இலங்கையில் உள்ள மேட்டுநிலங்களுக்கு **மூன்று** உதாரணம் தருக. (3 புள்ளிகள்)




**05)**

I. இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகளின் முக்கியமான **மூன்று** பிரிவுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. குடியிருப்பு ஒன்றில் உள்ளடங்கியுள்ள அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. இலங்கையின் **மூன்று** குடியிருப்பு வகைகளையும் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

**06)**

I. அபிவிருத்தி தொடர்பாக யுனெஸ்கோ நிறுவனம் வெளியிட்ட பிரகடனத்தைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

II. அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** குறிகாட்டிகளையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. மேலே வினா II இல் குறிப்பிட்ட குறிகாட்டிகளுள் **இரண்டு** குறிகாட்டிகளைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

**07)**

I. சூழலியற் சமநிலை என்றால் என்ன? (3 புள்ளிகள்)

II. சூழலியற் சமநிலையின்மையை ஏற்படுத்தும் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

III. மனித நடவடிக்கைகளினால் சூழல் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றைச்** சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)



kalvi.lk

ONLINE CLASSES - 2025

May

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை



**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**